DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No: **S.C.No.54/2025**
Prosecution Witness P.W.13

Name : **திரு.கார்த்திக்**
Caste:

Father's Name :**திரு.**
Calling :

Village:
Religion :

Taluk :
Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 07.03.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை**

1. நான் திருப்பூர் மாவட்டம் மூலனூரில் குடியிருந்து வருகிறேன். அயனிங் மாஸ்டராக திருப்பூரில் பணிபுரிந்து வருகிறேன். ஸ்லீப் பேஷன் என்ற பனியன் கம்பெனியில் நான் அயனிங் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 5 ஆண்டுகளாக நான் திருப்பூரில் பணிபுரிந்து வருகிறேன். தற்போது புகைப்படத்தில் காண்பிக்க கூடிய இருசக்கர வாகனமான TN 78 E 5801 Honda Dio ஸ்கூட்டர் எனக்கு சொந்தமான வண்டி. 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான் மேற்கண்ட வண்டியை திருப்பூர், உள்ள ஷோரூமில் வாங்கினேன்.. தாராபுரத்தில் அந்த வாகனத்தை பதிவு செய்தேன்.

2. 2024-ம் ஆண்டு ஜூலை மாதம் மேற்கண்ட வாகனத்தை எனக்கு பணத்தேவை இருந்த காரணத்தினால் எனது நண்பர் சிவக்குமார் என்பவரிடம் நான் அந்த வண்டியை அடமானம் வைத்தேன். அவரும் திருப்பூரை சேர்ந்தவர் தான். அவரிடம் வண்டியை கொடுத்துவிட்டு நான் ரூ.20,000/- பணம் பெற்றுக் கொண்டேன். அவரும் அயனிங் மாஸ்டர் தான் இது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் எங்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அவர் நான் வேலை

பார்த்த கம்பெனியில் எனக்கு முன்பு வேலை பார்த்தவர், என்னுடனும் ஒன்றாக வேலை செய்தவர் என்ற வகையில் அவர் எனக்கு பழக்கம்.

3. 2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் போலீசார் சின்னமனூர் காவல் ஆய்வாளர் என்னை தேடிக்கொண்டு திருப்பூர் மாவட்டத்திற்கு வந்தார்கள். அந்த இருசக்கர வாகனம் குறித்து ஆய்வாளர் என்னிடம் கேட்டபோது நான் அந்த இருசக்கர வாகனத்தை எனது நண்பர் சிவக்குமார் என்பவரிடம் அடகு வைத்த விவரத்தை தெரிவித்தேன். அதன் பிறகு சிவக்குமாரை பார்ப்பதற்காக ஆய்வாளர் என்னை அழைத்துக் கொண்டு சென்றார். சிவக்குமாரை ஆய்வாளரும், நானும் பார்த்தோம். அதன் பிறகு சிவக்குமார் வினித்குமார் என்பவரிடம் அழைத்துச் சென்றார். எந்த ஊரை சேர்ந்தவர், அதன் பிறகு என்னவானது எனக்கு தெரியாது, எனக்கு சிவகுமார் மட்டும் தான் பழக்கம். எனக்கு குடும்ப கஷ்டம் மற்றும் பணத்தேவை அதிகம் இருந்த காரணத்தினால் நான் எனது இருசக்கர வாகனத்தை அடமானத்திலிருந்து மீட்கவில்லை பெயர் மாற்றமும் செய்யவில்லை. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சின்னமனூர் காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் என்னை விசாரிக்க வந்தார் என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. திருப்பூரைச் சேர்ந்த போலீசார் யாரேனும் சின்னமனூர் காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் அழைத்து வந்தாரா என்றால் அவ்வாறு அழைத்து வரவில்லை. இந்த வழக்கில் எனக்கு எதிரிகள் யார் என்று தெரியாது. வினித் குமார் மற்றும் போலீசார் என்ன பேசிக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. உண்மையிலேயே நான் அடமானம் வைத்திருந்தால் ஒப்பந்தம் போட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அடமானமும் வைக்கவில்லை என்றும், வண்டி யாருக்கும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் எனது பெயர்

முகவரி மற்றும் கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்றும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. முழு விபரங்களை விசாரித்து வண்டி பற்றி விசாரித்தார்கள். எனது வாக்குமூலம் எதுவும் சொல்லி போலீசார் என் முன்னிலையில் பதிவு செய்யவில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.07 16:40:48 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.